பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 32 வெள்ளிக்கிழமை 16.07.2021 கதிர் 119

## தனிமைப்படுத்தலிலிருந்து தம்பாட்டி இன்று விடுவிப்பு

யாழ்ப்பாணம், புத்தளம் மாவட்டங்களில் மேலும் இரண்டு பிரதேசங்கள் தனிமைப் படுத்தலில் இருந்து இன்று விடுவிக்கப் பட்டுள்ளன என்று கொரோனா பரவல் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள் ளார்.

☞2

# கொத்தலாவல சட்டமூலத்தை கிழித்தெறி!

## அரச அடக்குமுறைக்கு எதிராக யாழில் போராட்டம்




(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப் பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட தொழிற்சங்க உறுப்பினர்களை விடுவிக்கு மாறு வலியுறுத்தியும், கொத்தலாவல பல் கலைக்கழக சட்டமூலத்துக்கு எதிராகவும் யாழ்ப் பாணத்தில் இன்று கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

யாழ். பஸ் நிலையத்துக்கு முன்னால் காலை 10 மணி முதல் 11 மணி வரையில் இந்தப் போராட் டம் நடத்தப்பட்டது.

☞2

## மனைவி வைத்தியசாலையில்; கணவன் வீட்டில் சடலமாக மீட்பு

### மாங்குளத்தில் சோகம்



(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்ட, மாங்குளம் பொலிஸ் பிரி வுக்குட்பட்ட செல்வபுரம் பகுதியிலிருந்து ஆண் ஒரு வரின் சடலம் மீட்கப்பட்டுள் ளது.

வீடு ஒன்றிலேயே குறித்த சடலம் இனங்கா ணப்பட்டுள்ளது.

☞2

## 15 இலட்சம் மொடர்னாத் தடுப்பூசிகள் இலங்கைக்கு அமெரிக்கா நன்கொடை

### இன்று காலை வந்தன நாட்டுக்கு




கொவேக்ஸ் திட்டத்தின் கீழ் அமெரிக் காவினால் 15 லட்சம் மொடர்னாத் தடுப் பூசிகள் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் இருந்து இன்று காலை அந்தத் தடுப்பூசி தொகை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

மொடர்னாத் தடுப்பூசிகள் 'கொவேக்ஸ்' ஊடாக இலங்கைக்கு வந்துள்ளதை, அமெரிக்க மக்கள் சார்பாக அறிவிப்பதில் நான் பெருமையடைகின்றேன். இந்த நன் கொடை உயிர்களைப்

☞2

## கொரோனாச் சட்டத்தை மீறிய மேலும் 157 பேர் சிக்கினார்கள்

தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய மேலும் 157 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள் ளார்.

இதற்கமைவாக தனிமைப்படுத்தல் சட்ட விதி முறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைது செய்யப்பட்டோரின் எண்ணிக்கை 50 ஆயிரத்து 184 ஆக அதிகரித்துள்ளது.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுவோரைக் கைது செய்வதற்கான சுற்றிவளைப்புகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

## யாழ். மாநகர சபை எல்லைக்குள் கொரோனாவால் 32 பேர் மரணம்

### 1,657 பேர் தொற்றுடன் அடையாளம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைப் பகுதிக்குள் இந்த வருடத்தின் இதுவரையான காலத்தில் 1,657 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத் துடன் 32 பேர் மரணமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவு முழுமையாகவும், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவின் 10 கிராம சேவகர் பிரிவு களையும் உள்ளடக்கிய யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழே மேற்கண்ட தரவு உறுதி செய்யப்பட்டுள்ளது.

☞2

## கொரோனாவால் 10 குழந்தைகள் பரிதாப மரணம்

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில், இதுவரை 10 குழந்தைகள், பொரளை சீமாட்டி வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளனர் என்று வைத்தியசாலை யின் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன், 490 குழந்தைகள் கொரோ னாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த குழந்தைகளுள் எந்தவொரு குழந் தைக்கும் வைத்தியசாலைக்குள்

☞2

### றிஷாத்தின் வீட்டில் பணியாற்றிய வேளை

## தீக்காயங்களுக்குள்ளான 16 வயது சிறுமி உயிரிழப்பு

அகில இலங்கை மக்கள் காங்கிர ஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப் பினருமான றிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது தீக்காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த 16 வயது யுவதி உயிரிழந்துள்ளார்.

கொழும்பு, பௌத்தாலோக மாவத் தையிலுள்ள றிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றி வந்த நுவரெலியா, டயகம பகுதியைச் சேர்ந்த குறித்த சிறுமி, கடந்த ஜூன் 3ஆம் திகதி தீக்காயங்களுக் குள்ளான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந் தார்.

இந்நிலையில், சிகிச்சை

☞2

## விசுவமடு பாரதி மகா வித்தியாலயத்தில் 24 மாணவர்கள் குளவிக்கொட்டுக்கு இலக்கு

### 9 மாணவர்களுக்கு மேலதிக சிகிச்சை

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியி ருப்பு, விசுவமடு பாரதி மகா வித்தியால யத்தில் கற்றலுக்காகச் சென்ற மாண வர்கள் 24 பேர் குளவிக்கொட்டுக்கு இலக்காகி, மூங்கிலாறு பிரதேச வைத்தி யசாலையில் இன்று காலை 8.30 மணி யளவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 9 மாணவர்கள், மேலதிக சிகிச்சைக்காக புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

குறித்த பிரதேசத்தில் தொலைத் தொடர்பு வசதிகள் சீரின்மையால் மாண வர்கள் இணையவழிக் கல்வியை முன் னெடுக்க முடியாத நிலை காணப்படுகின் றது.

☞2

## தனிமைப்படுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கமைய, யாழ்ப்பாணம், நாரந்தனை வடமேற்கு கிராம சேவகர் பிரிவு (தும்பாட்டி) இன்று காலை 6 மணி முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், புத்தளம், ஜே.பி. வீதியின் 9 ஆம் குறுக்குத்தெரு பகுதியும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது என்றும் இராணுவத் தளபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தீக்காயங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலனின்றி குறித்த சிறுமி நேற்று உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண இன்று தெரிவித்துள்ளார்.

சில மாதங்களுக்கு முன்பு குறித்த சிறுமி ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிப் பெண்ணாகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஜூன் 3 ஆம் திகதி அவர் சமையலறைக்கு அடுத்ததாகத் தங்கியிருந்த அறையொன்றில் இருந்து உடைகள் தீப்பிடித்த நிலையில் வெளியே வந்தார் எனவும், இதன்போது, வீட்டில் இருந்தோர் அவரை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுமி நேற்று உயிரிழந்ததைத் தொடர்ந்து ரிஷ் பதியுதீனின் வீட்டுக்குச் சென்ற நீதிவான், அங்கு தீப்பற்றிய அறையில் ஆய்வு நடத்தியுள்ளதுடன், சிறுமியின் மரணம் குறித்து பிரேத பரிசோதனை நடத்துமாறு பொரளைப் பொலிஸாரைக் கோரியுள்ளார்.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் வீட்டில் இருந்தவர்களிடம் வாக்குமூலங்களை பதிவு செய்துள்ள பொரளைப் பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

## கொத்தலாவல......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனிமைப்படுத்தல் சட்டத்தை அடக்குமுறைக்காக பயன்படுத்தாதே!, ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட தனிமைப்படுத்தப்பட்டவர்களை உடனே விடுதலை செய்!, கொத்தலாவல மசோதாவை கிழித்தெறி! போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு கோஷம் எழுப்பி அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும், அரசின் அடக்குமுறை மற்றும் சர்வாதிகாரப் போக்குக்கு எதிராக அனைவரும் ஓரணியில் திரண்டு தமது எதிர்ப்பை வெளியிட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆசிரியர் சங்கத்தினர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

## கொரோனாவால்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து கொரோனா தொற்றவில்லை என்றும், இவர்கள் அனைவருக்கும் சமூகத்திலிருந்தே கொரோனாத் தொற்றியுள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## மு/விசுவமடு.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்காக கற்றல் மத்திய நிலையமாக பாடசாலை இயங்கிய வேளையிலேயே, இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

## யாழ். மாநகர......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் அடிப்படையில் குறித்த காலப் பகுதியில் 12 ஆயிரத்து 262 பி.சி.ஆர். பரிசோதனைகள் இடம்பெற்றுள்ளன. இதில் 1,657 பேர் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். 32 பேர் கொரோனா காரணமாக மரணமடைந்துள்ளனர்.

இக் காலப் பகுதியில் 2 ஆயிரத்து 107 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 96 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, யாழ். மாநகர சபை எல்லைக்குள் இதுவரை 16 ஆயிரத்து 223 பேருக்கு முதலாவது தடுப்பூசியும், 6 ஆயிரத்து 158 பேருக்கு இரண்டு தடுப்பூசிகளும் ஏற்றப்பட்டுள்ளன.

## 15 இலட்சம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாக்கவும் இலங்கை மக்களின் அவசர சுகாதாரத் தேவைகளை நிவர்த்தி செய்யவும் பொருளாதாரப் பாதிப்புகளைத் தணிக்கவும் உதவும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கைக்குக் கிடைத்துள்ள மொடர்னா தடுப்பூசிகளை கண்டி மாவட்டத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

## மனைவி வைத்தி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

61 வயதுடைய அசோகன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவர்.

வீட்டில் துர்நாற்றம் வீசுவது தொடர்பில் அயலவர்களால் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக அடையாளம் காணப்பட்டவரின் மனைவி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் எனவும், பிள்ளைகள் தொழில் நிமித்தம் வேறு பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளைமுன்னெடுத்துவருகின்றனர்.

**விளம்பரத் தொடர்புகளுக்கு -**
**தொலைபேசி இலக்கம்-**
**மின்னஞ்சல் -**
**kalaikkathiradvt@gmail.com**

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நியாய விசாரணை அவசியம்

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் நடந்து இரண்டு ஆண்டுகள் கடந்து விட்டன. எனினும் அத்தாக்குதலின் பின்னணிகள் பற்றிய முழு உண்மைகளும் இன்னும் வரவில்லை. புலன் விசாரணைகள் கிணற்றில் போட்ட கல்லாகத் தேங்கிக் கிடக்கின்றன. இதனால் நீதிமன்ற விசாரணைகளும் வெறுமனே திகதியிடப்பட்டு முடங்கும் சூழ்நிலையே நீடிக்கின்றது.

இந்தத் தாமதத்துக்காக இந்த அரசின் மீதும், ஜனாதிபதியின் மீதும் தமது எரிச்சலையும், விசனத்தையும் கொட்டித் தீர்த்து வந்தது கிறிஸ்தவ மத பீடம். பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஜனாதிபதியையும் அவரது அரசையும் அவ்வப்போது ஒரு பிடி பிடிக்கத் தவறுவதில்லை.

ஆனால், கிறிஸ்தவ பீடம் இப்போதுதான் மெல்ல மனம் திறந்து தனது உள்ளக்கிடக்கையை அவிழ்த்துக் கொட்டத் தயாராகி வருகின்றது என்பது போல படுகின்றது.

"இந்தக் குண்டுத் தாக்குதல் தொடர்பான புலன் விசாரணைகளை தீவிரப்படுத்தி, குற்றமிழைத்தோரை சட்டத்தின் முன் நிறுத்துவதில் அரசுத் தலைமை தொடர்ந்தும் மெத்தனம் காட்டுகின்றது. காலதாமதம் செய்கின்றது. இந்தத் தாமதம், அத்தாக்குதலுக்குப் பின் அதிகாரத்துக்கு வந்த இந்த அரசுக்கும் இத்தாக்குதலில் தொடர்புகள் உள்ளனவோ என்ற சந்தேகத்தைப் பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. அந்தக் காரணத்தினால்தான் குற்றமிழைத்தோரை சட்டத்தின் முன் கொண்டு வராமல் காலத்தை இழுத்தடித்து சமாளிக்க அரசு முயலுகின்றது என மக்கள் சந்தேகப்படத் தொடங்கி விட்டார்கள்" – என்று கிறிஸ்தவ மத பீடம் சார்பில் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

தேசிய கத்தோலிக்க மையத்தின் சமூகத் தொடர்பு இயக்குநரும், நீர் கொழும்பு சென்ஆன்ஸ் தேவாலயத்தின் பங்குத் தந்தையுமான வண. சிறில் காமினி பெர்னான்டோ இது குறித்து கருத்து வெளியிட்டிக்கின்றார்.

"மேற்படி குண்டுத் தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்வதற்கு முன்னைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஓர் ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்தார். அது புதிய ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற பின்னரும் தனது விசாரணைகளைத் தொடர்ந்தது.

"இப்போது அந்த ஜனாதிபதி ஆணைக்குழு தனது இறுதி அறிக்கையை வழங்கி ஐந்து மாதங்கள் கடந்து விட்டன. ஆனால் அதில் கூறப்பட்ட எந்தப் பரிந்துரையும் நடைமுறைப் படுத்தப்படவே இல்லை அந்தப் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தும் பொறுப்பு ஜனாதிபதிக்கு உண்டு. ஆனால் அவர் அதைச் செய்யவில்லை." – என்று அவர் குறை கூறுகின்றார்.

இந்தத் தாக்குதல் விடயத்தில் சட்டத்தை நிலைநிறுத்தி, குற்றவாளிகளை மக்கள் முன் கொண்டு வரும் பொறுப்பு இலங்கை அரசுக்கும் ஜனாதிபதிக்கும் உண்டு. ஆனால் அத் தரப்பினர் அதனை முன்னெடுக்கின்றனர் இல்லை.

இந்தப் பின்புலத்தில்தான், இந்தக் குண்டுத் தாக்குதலின் பின்னணியில் பெரும் சதித் திட்டம் ஒன்று கட்டவிழ்ந்திருக்க வேண்டும், அது குறித்து விரிவான புலன் விசாரணைகள் நடத்தப்படுவது அவசியம் என்று தற்சமயம் ஓய்வு பெற்றுச் சென்றுள்ள சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா வெளியிட்ட திடுக்கிடும் திடீர் அறிக்கையை நோக்க வேண்டியுள்ளது.

அதேசமயம், இந்தத் தொடர் குண்டுத் தாக்குதல் மற்றும் அதையொட்டி நடைபெற்ற புலன் விசாரணைகள் தொடர்பில் நல்லாட்சிக் கால அரசு ஒரு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமித்து அதன் மூலம் இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து விசாரணை செய்தமையும் கவனிக்கத்தக்கது.

தாக்குதல் நடத்தியோர் எனச் சந்தேகிக்கப்படுவோர் மற்றும் தரப்பினர்கள் குறித்து புலன் விசாரணை செய்து, உண்மைகளைக் கண்டறியும் அதே நேரத்தில், இந்தத் தாக்குதல் மூலம் அரசியல் லாபங்களை யார் ஈட்டிக் கொண்டார்களோ, அவர்களுக்கும் இந்தத் தாக்குதல் நடத்தியவர்களுக்கும் இடைப்பட்ட தொடர்புகளையும் ஆராய வேண்டும் என நாடாளுமன்றத் தெரிவுக்குழு சுட்டிக் காட்டியிருந்தது.

அதையே இப்போது கிறிஸ்தவ மதத் தலைவர் ஒருவர் வேறு வகையில் சொல்ல விழைகின்றார்.

இந்தத் தொடர் குண்டுத் தாக்குதலின் நேரடியான அரசியல் விளைவாக அமைந்ததே கோட்டாபய தரப்பின் – மொட்டுக் கட்சியின் – தேசிய மட்ட தேர்தல் வெற்றிகளாகும்.

ஆகவே, இவ்விவகாரம் தொடர்பாக முன்னைய நாடாளுமன்றத் தெரிவுக்குழு தெரிவித்த விடயம் குறித்தும் –

முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா சட்டமா அதிபராக இருந்த சமயம் வெளியிட்ட சந்தேகம் பற்றியும் –

இப்போது கிறிஸ்தவ மதத் தலைவர் ஒருவர் கிளப்பியுள்ள கேள்வியின் கோணத்தில்

இந்தக் குண்டுத் தாக்குதலுக்கும், அத்தாக்குதலினால் அரசியல் லாபங்கள், வெற்றிகள், நன்மைகளை அடைந்தோருக்கும் உள்ள தொடர்புகள் குறித்தும் –

நியாயமான விசாரணை ஒன்று நடத்தப்படுவது அவசியமாகும்.

## கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு இணைத்தலைவராக டக்ளஸ் கிடைத்தமை எம் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமே!

### அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் பெருமிதம்



கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நியமிக்கப்பட்டிருக்கின்றமை ஒரு வரப்பிரசாதம் எனத் தெரிவித்துள்ள கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், இதனை கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கான டபிள் புரொமோஷன் எனவும் தெரிவித்துள்ளார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவில் நலிவுற்ற பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட 'இயக்கி' உணவு விற்பனை நிலையத்தின் திறப்பு விழாவில் நேற்று (வியாழக்கிழமை) சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி அமைப்பின் நிதிப் பங்களிப்பில் 'இயக்கி' என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள உணவு விற்பனை நிலையத்தின் திறப்பு விழா, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் ப.ஜெயராணி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய மாவட்ட அரசாங்க அதிபர் –

அண்மைக் காலமாக நட்சத்திர அந்தஸ்துள்ள உணவகங்களைவிட கிராமிய வாசனை வீசுகின்ற உணவகங்களை நாடி மக்கள் செல்வது அதிகரித்துள்ளமையால், இவ்வாறான முயற்சிகள் வெற்றியளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இயக்கி அமைந்துள்ள அமைவிடமும், வடக்கு நோக்கி வருகின்ற சுற்றுலாப் பிரயாணிகளைக் கவரும் வகையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்தில் உள்ளூர் உற்பத்திகளுக்கான விற்பனை நிலையங்களும் உருவாக்கப்படும் பட்சத்தில் உள்ளூர் உற்பத்திகளுக்கு சிறந்த சந்தை வாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியும்.

உள்ளூர் உற்பத்திகளை அதிகரித்து, வேலை வாய்ப்புக்களையும் பொருளாதார வளர்ச்சியையும் ஏற்படுத்தும் முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபாடு காட்டி வருகின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எமது மாவட்டத்தின் ஒருங்கிணைப்பு இணைத்தலைவராக இருக்கின்றமை கிளிநொச்சி மாவட்டத்துக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும்.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவர் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக இருக்கின்ற ஒரேயொரு மாவட்டம் கிளிநொச்சி மாவட்டம்தான். இது எமது மக்களுக்கான டபிள் புரொமோஷனாகவே அமைந்துள்ளது.

எனவே, இயக்கி உணவகம் போன்ற முயற்சிகளுக்கு தேவையான ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கும்.' எனவும் தெரிவித்துள்ளார்.

## யால தேசியப் பூங்காவுக்குள் பாரிய புதையல்கள் உள்ளன!

### என்கிறார் ஹர்ஷன ராஜகருணா எம்.பி.



யால தேசியப் பூங்காவிற்குள் பாரியளவிலான புதையல்கள் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அந்த மிகப்பெரிய புதையலை வெளியே எடுக்க இரகசிய திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் யால தேசிய வனவிலங்கு பூங்காவிற்குள் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் விசேட திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த இடத்திற்குச் செல்வதற்காக வீதிகள் மற்றும் ஹெலிக்கொப்டர் தரையிறங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யால காடு மிகவும் பெறுமதியான ஒன்று எனவும் இதுவரையில் அங்கு மிருகங்கள் அதிக அளவில் வாழ்கின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார். அந்தப் பூங்கா இலங்கைக்கு மிகப்பெரிய அளவில் வருமானம் தேடித் தருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வெளிநாட்டுத் தூதுவர்களை கொழும்பில் சந்திக்கும் பஸில்

புதிய நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள பஸில் ராஜபக்ஷ கொழும்பைத் தளமாகக் கொண்ட பல வெளிநாட்டுத் தூதர்களுடன் சந்திப்புகளை மேற்கொண்டுள்ளார்.

நாட்டுக்கு முதலீடுகளைக் கொண்டு வருவதில் இலங்கையின் அனைத்து சர்வதேச நட்பு நாடுகளுடனும் நெருக்கமாக ஒத்துழைப்பதற்கான தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினேன் எனப் பஸில் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அத்துடன், இது வளர்ச்சியை துரிதப்படுத்துவதுடன், இலங்கையர்களுக்கு புதிய வாய்ப்புகளைத் கொண்டுவரும் என நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, ஐரோப்பிய ஒன்றியம், பிரான்ஸ் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளைச் சேர்ந்த தூதர்களை பஸில் ராஜபக்ஷ சந்தித்து பேசியுள்ளார். இதற்கிடையில், இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவை சந்தித்து இந்தியாவின் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் வாழ்த்துக் கடிதத்தை ஒப்படைத்தார் என டுவீட் செய்துள்ளார்.

## 24 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர் மதிப்புள்ள வளங்கள் அடையாளம்

இலங்கையில் 24 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர் மதிப்புள்ள எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இந்த எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்களின் முழு திறனையும் பயன்படுத்தினால் இலங்கை அதன் வெளிநாட்டு கடன் நிலைத்தன்மை தொடர்பான பிரச்சினையை நன்கு கையாள முடியும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையின் வெளிநாட்டு கடன் தொகை சுமார் 4,500 கோடி அமெரிக்க டொலர்கள். ஆனால், இலங்கையிடம் 24 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர் மதிப்புள்ள எண்ணெய் மற்றும் எரிவாயு வைப்பு உள்ளது என்று அவர் கூறினார். இந்தநிலையில் எண்ணெய் மற்றும் எரிவாயு துறையின் முன்னேற்றத்திற்கு உதவும் புதிய சட்டம், அடுத்த திங்கட்கிழமை அமைச்சரவையில் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.



# ஐரோப்பிய நாடுகளில் கனமழை; 70 பேர் சாவு

பெல்ஜியம், ஜேர்மனி, நெதர்லாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் தொடர் மழையால் ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு வீடுகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதுவரை 70இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ள நிலையில், நூற்றுக்கணக்கானோர் மாயமாகியுள்ளனர் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

ஐரோப்பாவின் மேற்குப் பகுதியில் இரண்டு நாள்களாக கனமழை பெய்து வருகிறது.

ஜேர்மனியின மேற்குப் பகுதியில் உள்ள Rhineland Palatinate மாகாணத்தில் கொட்டித்தீர்த்த கன மழையால் சாலைகளும் கட்டடங்களும் உருக்குலைந்து கிடக்கின்றன. வீட்டின் மேற்கூரையில் தஞ்சம் அடைந்த மக்களை மீட்கும் பணியில் இராணுவம் மற்றும் ஹெலிக்கொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டு உள்ளது. ஜேர்மனியில் வெள்ளத்தில் சிக்கி ஏறத்தாழ 58 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தகவல் வெளியாகி உள் ளது.

பெல்ஜியத்தில் வாலோனியா மாகாணத்தில் கனமழை காரணமாக எங்கும் வெள்ளக் காடாக காட்சியளிக்கிறது. வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்க இத்தாலி விமானப்படை விமானங்கள் விரைந்துள்ளன. லெய்ஜ் (Lige) நகரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

நெதர்லாந்து மற்றும் சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகளிலும் கடும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. முக்கிய பகுதிகளை மழைநீர் சூழ்ந்ததால் பொது மக்கள் வாகனங்கள் மூலம் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டு வருகின்றனர். ஐரோப்பிய நாடுகளில் கனமழை மற்றும் வெள்ளத்துக்கு 70இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். பல இடங்களை வெள்ளம் சூழ்ந்துள்ள நிலையில், நூற்றுக்கணக்கானோர் மாயமாகியுள்ளனர் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

# பிரேஸில் நாட்டினுடைய அதிபர் வைத்தியசாலையில் அனுமதி

## சர்வதேச அரங்கில் பரபரப்பு



ஆஸ்பத்திரி படுக்கையில் படுத்திருக்கும் படத்துடன் டுவிட்டரில் பதிவிட்ட ஜெயிர் போல்சொனரோ, கடவுள் விருப்பப்படி விரைவில் திரும்ப வருவேன் என குறிப்பிட்டிருந்தார். பிரேஸில் நாட்டின் அதிபராக 2019 ஜனவரி முதலாம் திகதி முதல் பதவி வகிப்பவர், ஜெயிர் போல்சொனரோ (வயது 66) ஆவார். கடந்த 2018ஆம் ஆண்டு நடந்த அதிபர் தேர்தல் பிரசாரத்தின்போது அவர் கத்தியால் குத்தப்பட்ட சம்பவத்தில் இருந்து அவரது உடல்நிலை குறித்து கவலைகள் எழுந்து வந்தன. அப்போது அவரது உடலில் இருந்து 40 சதவீத இரத்தம் வெளியேறியது. அதைத் தொடர்ந்து அவருக்கு பல அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன.

பிரேஸில் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இந்த தொற்றை அவர் கையாளும் விதம் அங்கு பெருத்த சர்ச்சையை ஏற்படுத்தி வந்தது. இதனால் அவருக்கு எதிராக கடுமையான அழுத்தங்கள் ஏற்பட்டு வந்தன.

இந்த மாதத்தின் தொடக்கத்தில் கூட தடுப்பூசிகள் கொள்முதலில் ஊழல் நடைபெற்றிருப்பதாக கூறி பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட்டங்களை நடத்தி பரபரப்பு ஏற்படுத்தினர். கடந்த மாதம் அங்கு கொரோனாச் சாவு எண்ணிக்கை 5 லட்சத்தை கடந்து விட்டது. அதிபர் ஜெயிர் போல்சொனரோவும் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு மீண்டார்.

இந்த நிலையில், அதிபர் ஜெயிர் போல்சொனரோ கடந்த 10 நாள்களாக தொடர் விக்கலால் அவதிப்பட்டு வந்தார். இதையடுத்து நேற்றுமுன்தினம் காலையில் இவர் தலைநகர் பிரேஸிலியாவில் உள்ள ஆயுதப் படைகள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு முதல் கட்டப் பரிசோதனைகள், சிகிச்சைகள் செய்யப்பட்டன. அவர் 24 முதல் 48 மணி நேரம் தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டிருப்பார் என டாக்டர்கள் தெரிவித்தனர். இதற்கிடையே வைத்தியசாலையில் படுக்கையில் படுத்திருக்கும் படத்துடன் டுவிட்டரில் பதிவிட்ட ஜெயிர் போல்சொனரோ, கடவுள் விருப்பப்படி விரைவில் திரும்ப வருவேன் என குறிப்பிட்டிருந்தார்.

இரவில் ஜெயிர் போல்சொனரோ, சாவ் பாவ்லோ நகரில் உள்ள நோவாஸ்டார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அந்த வைத்தியசாலையிலும் அவருக்கு பரிசோதனைகள் செய்யப்பட்டன.

அவரது குடலில் அடைப்பு ஏற்பட்டிருப்பது தெரிய வந்தது. ஆனால் அவருக்கு உடனடியாக அறுவைச் சிகிச்சை தேவைப்படாது என தெரிவிக்கப்பட்டது. பிரேஸில் அதிபர் ஜெயிர் போல்சொனரோ திடீரென வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றமை சர்வதேச அரங்கில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



# விண்வெளிக்குச் செல்கிறார் 18 வயது இளைஞர்

மனிதர்களுடன் விண்ணுக்கு செலுத்தப்பட உள்ள விண்கலத்தில் அமேசான் தலைமை செயல் அதிகாரி ஜெப் பெசோஸ் (JEFF BEZOS) உடன் ஆலிவ் டையமென் ( Olive Daemen) என்ற 18 வயது இளைஞர் ஒருவரும் பயணம் மேற்கொள்ள இருக்கிறார்.

சுமார் 2.8 கோடி டொலர் மதிப்புடைய ஒரு இடத்தை அமேசான் நிறுவனம் ஒன்லைனில் ஏலம் விட்டது. இதில் முதல் பயணத்துக்கு 18 வயது வாடிக்கையாளரை தேர்வு செய்திருப்பதாக அமேசான் நிறுவனம் அறிவித்துள்ளது. ஆலிவரிடமிருந்து எவ்வளவு பணம் பெறப்பட்டது என்ற விவரம் வெளியிடப்படவில்லை. வரும் 20ஆம் திகதி இந்த விண்கலம் ரொக்கெட் மூலம் அமெரிக்கா -டெக்ஸாஸின் மேற்கு பாலைவனப்பகுதியில் இருந்து விண்ணில் செலுத்தப்படுகிறது.

# கியூபாவில் உணவு, மருந்துகள் மீதான சுங்க வரிகள் இரத்து

## கியூபா மக்களின் கோரிக்கையால்



கியூபா செல்கிற பயணிகள் இந்த ஆண்டு இறுதிவரையில் வரம்பின்றி உணவு, மருந்துப் பொருள்களை எடுத்துச்செல்ல முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கியூபா நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுப்பரவலுக்கு மத்தியில் உணவுப் பொருள்களுக்கும், மருந்து பொருள்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. விலைவாசிகள் கடுமையாக உயர்ந்துள்ளன.

உணவுப்பொருள்களுக்கும், மருந்துப் பொருள்களுக்குமான சுங்க வரிகள் ரத்துச் செய்யப்பட வேண்டும் என்பது மக்கள் கோரிக்கையாக அமைந்தது. இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி மக்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று வீதிகளில் இறங்கிப் போராட்டங்கள் நடத்தினர். அங்கீகாரமற்ற போராட்டங்கள், அரசு எதிர்ப்புப் போராட்டங்கள் அங்கு சட்ட விரோதம் ஆகும். எனவே இந்தப் போராட்டங்களால் பலர் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில், உணவுப்பொருள்கள், மருந்துப்பொருள்கள் மீதான சுங்க வரிகளை தற்காலிகமாக ரத்து செய்து கியூபா அரசு உத்தரவிட்டுள்ளது.

மேலும் கியூபா செல்கிற பயணிகள் இந்த ஆண்டு இறுதி வரையில் வரம்பின்றி உணவு, மருந்து பொருள்களை எடுத்துச் செல்ல முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# நீட் தேர்வு தொற்றுப் பரவலுக்கு வழிவகுக்கும் என்பதால் முடிவை மறுபரிசீலனை செய்ய ஸ்டாலின் வேண்டுகோள்



கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலில் கவலையளிப்பதாகக் காணப்பட்ட 8 வடகிழக்கு மாநில முதலமைச்சர்களுடன் 13ஆம் திகதி பிரதமர் நரேந்திர மோடி காணொலிக் காட்சி மூலம் ஆலோசனை நடத்தினார். அப்போது, மலை வாழிடங்கள், சந்தைகளில் முகக்கவசம் அணியாமலும், தனிமனித இடைவெளியை பின்பற்றாமலும் பலர் இருப்பது கவலையளிக்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், தொற்றுப் பரவலில் சரிவைச் சந்திக்காத மாநிலங்கள் மற்றும் தொற்றுப் பரவல் அதிகரிக்கும் மாவட்டங்களைக் கொண்ட மாநில முதலமைச்சர்களுடனும் அவர் இன்று உரையாடியிருக்கிறார்.

தமிழகம் உள்ளிட்ட 6 மாநில முதலமைச்சர்களுடன் இன்று காலை 11 மணியளவில் காணொலிக் காட்சி மூலம் பிரதமர் நரேந்திர மோடி ஆலோசனை மேற்கொண்டார். கூட்டத்தில் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கருத்துத் தெரிவிக்கும்போது, கொரோனாத் தடுப்புப் பணிகளில் இருந்து தாங்கள் பெற்ற மேலான அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதற்காக உங்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'கொரோனா பெருந்தொற்றைச் சமாளிக்கும் கடினமான பணியைப் புதிதாகப் பொறுப்பேற்ற ஓர் அரசு எதிர்கொள்ள வேண்டிய நிலை இருந்த ஒரே பெரிய மாநிலம் தமிழ்நாடுதான். எனது அரசு இச்சவாலை எதிர்கொண்டு, உயிரிழப்புகளைக் குறைத்து, நோய்த்தொற்றைக் கட்டுக்குள் கொண்டுவந்துள்ளது.

தமிழ்நாட்டுக்கான ஒக்சிஜன் மற்றும் ரெம்டெசிவர் ஒதுக்கீட்டை உயர்த்தி வழங்கியமைக்காக இந்திய அரசுக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன். பிரதமரின் கவனத்திற்கு சில முக்கியமான விவரங்களை கொண்டுவர விரும்புகிறேன்.

தடுப்பூசிகள் வீணடிக்கப்படுவதை, எமது அரசு 6 வீதத்திலிருந்து முழுமையாகத் தவிர்த்துள்ளதுடன், தடுப்பூசி பற்றிய விழிப்புணர்வையும் பெரிய அளவில் வெற்றிகரமாக ஏற் படுத்தியுள்ளது. இதனால், தற்போது தமிழ்நாட்டில் தடுப்பூசிக்கான தேவை மிகவும் அதிகரித்துள்ளது. எனினும், பிற மாநிலங்களை ஒப்பிடுகையில், எங்கள் மாநிலத்துக்கான ஒதுக்கீடு மிகவும் குறை வாகவே உள்ளது. இந்த நெருக்கடியைச் சமாளிக்க, சிறப்பு ஒதுக்கீடாக ஒரு கோடி தடுப்பூசிகளை வழங்கக் கோரியிருக்கிறேன். இந்த முக்கியமான பிரச்சினையில், நான் உங்கள் ஆதரவை எதிர்நோக்குகிறேன்.

இரண்டு கோடி குடும்பங்களுக்கு, இரு தவணைகளில் 4 ஆயிரம் ரூபாவை கொரோனா நிவாரணத் தொகையாக கொடுத்துள்ளோம்.

மேலும், 14 மளிகைப் பொருள்கள் அடங்கிய தொகுப்பையும் இந்தக் குடும்பங்களுக்கு வழங்கியுள்ளோம். ஒன்றிய அரசு முன்னுரிமை அட்டைதாரர்களுக்கு வழங்கும் கூடுதல் அரிசியை அனைத்து அரிசி அட்டைதாரர்களுக்கும் தமிழ்நாடு அரசு விரிவுபடுத்தியுள்ளது. இதைப்போன்று, தகுதியுடைய அனைத்து அட்டைதாரர்களுக்கும் இத்திட்டத்தை ஒன்றிய அரசு விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, தற்போது நிலவும் சூழலைக் கருத்தில் கொண்டு, கொரோனா தொடர்பான அனைத்துப் பொருள்களுக்கும் சரக்கு மற்றும் சேவை வரியில் இருந்து விலக்கு அளிக்கவேண்டும் என்றும் ஒன்றிய அரசைக் கேட்டுக்கொண்டிருந்தேன். அதனைக் கனிவுடன் பரிசீலிக்கவும்.

மூன்றாம் அலை வரும் எனக் கூறப்படுகிற நிலையில், அதனைச் சமாளிப்பதற்கான அனைத்து முன்னேற்பாடுகளையும் நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். அதனை எதிர்கொள்வதற்கு ஏதுவாக, மாநிலங்களுக்கு மேலும் பல உதவிகளை ஒன்றிய அரசு வழங்கிட வேண்டும். பாடசாலைகள் – கல்லூரிகள் மூடப்பட்டு இருக்கும் தற்போதைய சூழலில், நீட் போன்ற தேசிய அளவிலான தேர்வுகளை நடத்துவது தொற்றுப்பரவலுக்கு வழி வகுத்துவிடலாம். எனவே, பிரதமர் இம்முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

இப்பெருந்தொற்றைக் கையாள்வதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் என உறுதியளிக்கிறேன். இதில் இருந்து மீள, உங்களோடும் அனைத்து மாநிலங்களோடும் நாங்கள் துணை நிற்போம் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

## கொரோனாத் தொற்றினால் உயிரிழந்த விவசாயிகளின் வேளாண் கடன்களை தள்ளுபடிசெய்ய கர்நாடகா அரசு முடிவு



கொரோனாத் தொற்றினால் உயிரிழந்த விவசாயிகள் பெற்றுள்ள வேளாண் கடன்களைத் தள்ளுபடி செய்ய அரசு முடிவெடுத்துள்ளதாக கர்நாடக கூட்டுறவு துறை அமைச்சர் கூறியுள்ளார்.

இது குறித்து கர்நாடக கூட்டுறவுத் துறை அமைச்சர் சோமசேகர் செய்தியாளர்களிடம் கூறுகையில், கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக விவசாயிகளும் கூலித் தொழிலாளர்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். குடும்பத்துக்காக பணிக்குச் சென்று சம்பாதித்த தாய், தந்தை உள்ளிட்ட முக்கிய உறுப்பினர்கள் தொற்றுக்கு பலியானதால் ஒட்டுமொத்த குடும்பமும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு கர்நாடாகாவில் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழ்வோருக்கான நிவாரண அட்டை வைத்துள்ள குடும்பத்தில் கொரோனாவுக்கு பலியானோருக்கு ஒரு லட்சம் ரூபாவை நிவாரணமாக வழங்குவதாக முதல்வர் எடியூரப்பா ஏற்கனவே அறிவித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து கொரோனா தொற்றினால் பலியான விவசாயிகள் பெற்றுள்ள வேளாண் கடனையும் தள்ளுபடி செய்ய அரசு முடிவெடுத்துள்ளது. கர்நாடகாவில் 2020-21ஆம் நிதியாண்டில் 25.67 லட்சம் விவசாயிகள் மாவட்ட கூட்டுறவு வங்கிகளில் ரூபா.17,108 கோடி கடன் வாங்கியுள்ளனர்.

இதில் கடன் பெற்ற விவசாயிகளில் 10,187 பேர் தொற்றினால் உயிரிழந்துள்ளனர். எனவே, அவர்களின் குடும்பத்தின் நிதி சுமையைக் குறைக்கும் வகையில் இறந்த விவசாயிகள் பெற்ற ரூபா.79.47 கோடி கடன் தள்ளுபடி செய்யப்படும். இதற்கான அறிவிப்பை முதல்வர் எடியூரப்பா ஓரிரு தினங்களில் வெளியிடுவார் என்று தெரிவித்தார்.



## ஐந்து மாதங்களுக்குப் பின் நாளை முதல் சபரிமலையில் பக்தர்கள் தரிசனம் செய்ய கட்டுப்பாடுகளுடன் அனுமதி

கொரோனா ஊரடங்கு காரணமாக கடந்த சில மாதங்களாக மூடப்பட்டிருக்கும் சபரிமலை ஐயப்பன் கோவில் நடை, மாதாந்திர பூஜைகளுக்காக இன்று மாலை திறக்கப்படுகிறது.

சுமார் ஐந்து மாதங்களுக்குப் பின் நாளை முதல் சபரிமலையில் பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதிக்கப்படவுள்ளனர்.

கடந்த மே மாதம் கொரோனாத் தொற்று பரவல் தீவிரம் அடைந்ததைத் தொடர்ந்து சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு பக்தர்கள் வரத் தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில் ஆடி மாதப் பிறப்பையொட்டி ஜுலை 16 ஆம் திகதி மாலை சந்நிதான நடை திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஜுலை 17 முதல் 21 ஆம் திகதி வரை 5 நாள்களுக்கு கோவிலுக்கு வர பக்தர்களுக்கு அனுமதி அளிக் கப்பட்டுள்ளது.

தினசரி 5,000 பக்தாகள் தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுவா். அவாகள் முன்கூட்டியே இணையத் தளத்தில் முன்பதிவு செய்திருக்க வேண்டும். அவ்வாறு கோயிலுக்கு வரும் பக்தர்கள் கொரோனாத் தடுப்பூசியின் இரண்டு தவணைகளையும் செலுத்தியிருக்க வேண்டும் அல்லது கோவிலுக்கு வருவதற்கு 48 மணி நேரத்துக்கு முன்பாக ஆர்.டி.பி.சி.ஆர். கொரோனா தொற்றுப் பரிசோதனை செய்துகொண்டு, தங்களுக்கு தொற்றுப் பாதிப்பு இல்லை என்பதற்கான சான்றிதழுடன் வர வேண்டும் என்று சபரிமலை ஐயப்பன் கோயிலை நிர்வகித்து வரும் திருவிதாங்கூர் தேவஸ்தானம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பா.ஜ.க.தான் தமிழகத்தின் எதிர்காலமாக இருக்கும்;மாநில தலைவராகப் பொறுப்பேற்ற அண்ணாமலை பேட்டி

தமிழக பா.ஜ.கவின் மாநில தலைவராக இன்று சென்னை கமலாலயத்தில் அண்ணாமலை பொறுப்பேற்றுக் கொண்டார். பின்னர், அண்ணாமலை, எல். முருகன் உள்ளிட்டோர் கூட்டாக ஊடகவியலாளர்களை சந்தித்தனர். அப்போது, தி.மு.க. ஆட்சிக்கு வந்து 70 நாள்களாகியும் ஒரு தேர்தல் வாக்குறுதியைக்கூட முழுமையாக நிறைவேற்றவில்லை. நீட் தேர்வை ரத்து செய்வோம் என்று கூறியதை தி.மு.க. செய்யவில்லை. நீட் தேர்வால் கிராமப்புற மாணவர்கள் அதிகம் பேருக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. ஏழை, எளிய குடும்பங்களுக்கு நீட் வரப்பிரசாதமாக இருக்கிறது. நீட் தேர்வு நல்லது என்று வீதி வீதியாகச் சென்று மக்களிடம் சொல்வோம். கொரோனா தடுப்பூசியை மத்திய அரசு சிறப்பாக செலுத்தி வருகிறது. நேற்று ஒரே நாளில் 66 கோடி தடுப்பூசிக்கு கொள்முதல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மாநிலவாரியாக ஒழுங்குபடுத்தலின்படி தடுப்பூசி கொடுக்கப்படுகிறது. அதில் 15 நாள்களுக்கு முன்பே தடுப்பூசி விவரம் மாநிலங்களுக்கு தரப்படுகிறது. தயக்கம் காரணமாக தடுப்பூசிக்கு வரவேற்பு இல்லாமல் இருந்தது. ஆனால், இப்போது ஒரேநேரத்தில் தடுப்பூசிக்கு பெரும் தேவை இருக்கிறது.

ஊடகங்கள் மீது பா.ஜ.கவிற்கு மிகப் பெரிய நம்பிக்கை இருக்கிறது. தமிழக ஊடகங்கள் குறித்து நான் பேசிய கருத்து திரித்துக் கூறப்பட்டுகிறது. பாரம்பரியமாக இருக்கும் ஊடகங்களுக்கு முறையான அமைப்பு இருப்பது எனக்கு நன்றாகவே தெரியும். நான் கூறியது அதுவல்ல. புதிய தகவல் தொழிநுட்ப விதிகள் பற்றியே கூறினேன். மத்திய அரசின் திட்டங்களில் தமிழகத்தைச் சேர்ந்த 3.5 கோடி பேர் பயனடைந்திருக்கின்றனர்.

ஓர் ஆண்டாக கட்சிக்கு உழைத்த எனக்கு பெரிய பொறுப்பை தந்துள்ளனர். தமிழகத்தில் பா.ஜ.கவின் வளர்ச்சியை யாராலும் தடுக்கமுடியாது. பா.ஜ.கவின் காலமே தமிழகத்தின் எதிர்காலமாக இருக்கும் என்று அண்ணாமலை தெரிவித்திருக்கிறார்.



# சட்ட விரோத போதைப்பொருள் விற்பனை தடுத்து நிறுத்தக் கோரி மக்கள் கவனயீர்ப்பு

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவின் பிறைத்துறைச்சேனையில் சட்ட விரோத போதைப்பொருள் விற்பனை நடவடிக்கை இடம்பெறுவதனைக் கண்டித்தும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தடுத்து நிறுத்துமாறு கோரியும் கிராம மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை ஒன்று கூடியவர்கள் எதிர்ப்பு நடவடிக்கையினை மேற்கொள்ளும் முகமாக வாசகங்கள் எழுதிய பதாதைகளை கையில் ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் வீதி வழியாக சென்று வாழைச்சேனை நீதவான் நீதிமன்றத்திற்கு முன்னால் உள்ள பிரதான வாழைச்சேனை கொழும்பு வீதியில் நின்று கவனயீர்ப்பு கண்டனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது மக்கள் பொலிஸாருக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பினார்கள் சம்பவ இடத்திற்கு வருகை தந்த வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் தங்களது கோரிக்கை அடங்கிய மகஜரை கையளித்தனர்.

பின்பு பொலிஸார் அவர்களை கலைந்து செல்லுமாறு பணித்ததனையடுத்து கலைந்து சென்றதுடன் மீண்டும் அவர்கள் வசிக்கும் பன்சாலை வீதி பிறைந்துறைச்சேனையில் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினார்கள்.

இந்தக் கிராமத்தில் சுமார் 1,540 குடும்பங்கள் வசித்து வருகின்றன எனவும் இங்கு சிலர் போதைப் பொருள் விற்பனையில் பகிரங்கமாக ஈடுபட்டு வருகின்றனர் பொலிஸார் இதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும் தெரிவிக்கின்றனர்.

இதனால் பாடசாலை செல்லும் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் பெரும் சிரமத்தினை எதிர்நோக்குவதுடன் கொரோனத் தொற்று காலத்திலும் தங்கள் கிராமத்திற்குள் வெளியூர் வாசிகள் வந்து போதைப்பொருள்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபடுவதனால் கொரோனாத் தொற்று ஏற்படும் அச்ச நிலையும் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

# திருகோணமலையில் ஹெரோயினுடன் இருவர் கைது

திருகோணமலை துறைமுக பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் ஹெரோயினுடன் இருவர் கைது செய்யப்பட்டனர் என துறைமுக பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை கடற்படையினருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் துறைமுக பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஹெரோயி னுடன் இருவர் கைது செய்யப்பட்டனர் என துறைமுக பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து 4 கிராம் 900 மில்லிகிராம் போதைப் பொருள் கைப் பற்றப்பட்டதாக துறைமுகப் பொலிஸார் தெரி வித்தனர். கைப்பற்றப்பட்ட ஹெரோயின் பிரிதொரு நபருக்கு விற்பனைக்காக கொண்டுவரப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்கள் 4ஆம் கட்டை, கண்டி வீதியைச் சேர்ந்த 23 வயதுடைய நபரும், ஜயசுந்தர மாவத்தை, 5ம் கட்டை, கண்டி வீதியைச் சேர்ந்த 23 வயதுடையவர்கள் என துறைமுக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஹெரோயினையும் நேற்று திருகோணமலை நீதிமன்றத்தில் ஒப்படைத்து வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என துறைமுக பொலிஸார் தெரிவித்தனர்.

# காத்தான்குடியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் மூவர் கைது

மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதேசத்தில் ஹெரோயின் போதைப்பொருளுடன் மூவரை, நேற்று கைது செய்துள்ளோம் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து இந்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 230 மில்லிக்கிராம், 170 மில்லிக்கிராம், 2 கிராம் 160 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப்பொருள்களை மீட்டுள்ளோம் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.



# காரைதீவு வீதியில் விபத்து; சாய்ந்தமருது வர்த்தகர் சாவு

அம்பாறை, வளத்தாப்பிட்டி பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் சாய்ந்தமருதைச் சேர்ந்த இளம் வர்த்தகர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

சாய்ந்தமருதில் இருந்து அம்பாறை நகருக்கு நேற்றுமுன்தினம் சென்று திரும்பிவரும்போது, அம்பாறை – காரைதீவு பிரதான வீதியில், வளத்தாப்பிட்டி வளைவில் இவர் செலுத்திச் சென்ற மோட்டார் சைக்கிள், எதிரே வந்த வாகனத்துடன் நேருக்கு நேர் மோதியதால் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது சம்பவ இடத்திலேயே இரண்டு பிள்ளைகளின் தந்தையான எம்.முஹம்மத் அஷாப் (வயது 41) எனும் இந்த வர்த்தகர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். இவருடன் பின் ஆசனத்தில் இருந்து பயணித்த இவரது உதவியாளர் ஒருவர் படுகாயமடைந்து, அம்பாறை பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த வர்த்தகரின் திடீர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து சாய்ந்தமருது நகரில் வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டு, துக்கம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.



# அம்பாறையில் புதிய 3 பொலிஸ் நிலையங்கள்

அம்பாறையில் புதிதாக 3 பொலிஸ் நிலையங்கள் திறப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இறக்காமம், நிந்தவூர் மற்றும் பண்டாரதுர ஆகிய பிரதேசங்களில் இவ்வாறு புதிதாக பொலிஸ் நிலையங்களை திறக்கத் தீர்மானித்துள்ளனர்.

இதற்கு பொலிஸ் மா அதிபர் அனுமதி வழங்கியதையடுத்து, மாவட்டத்தில் தற்போது தமண பொலிஸ் பிரிவிலுள்ள இறக்காமம் பிரதேசத்தில் இறக்காமம் பொலிஸ் நிலையமும், தற்போது சம்மாந்துறை பொலிஸ் பிரிவிலுள்ள நிந்தவூர் பிரதேசத்தில் நிந்தவூர் பொலிஸ் நிலையமும், பண்டாரதுர பிரதேசத்தில் பண்டாரதுர பொலிஸ் நிலையமும் திறக்கப்படவுள்ளன.

இந்த புதிய பொலிஸ் நிலையங்கள் அமைப்பதற்கான இடங்கள் தெரிவு செய்யப்பட்டு, அதற்கான பொலிஸ் பிரிவு எல்லைகள் பிரிக்கப்பட்டு, அதிகாரிகள் தெரிவு செய்யப்பட்டு வெகு விரைவில் புதிய பொலிஸ் நிலையங்கள் திறப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

# திருக்கோவில் பிரதேசத்தில் சௌபாக்கியா உற்பத்திக் கிராம வேலைத்திட்டம் ஆரம்பம்

திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரனின் தலைமையில் தங்கவேலாயுதபுரம் மீள்குடியேற்றக் கிராமத்தில் சௌபாக்கியா உற்பத்திக் கிராம வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது சௌபாக்கியா உற்பத்திக் கிராமத்தில் முன்னெடுக்கப்படும் விவசாய உற்பத்தியினை சந்தைப்படுத்துவதற்கான புதிய கட்டம் ஒன்று திறந்து வைக்கப்பட்டதுடன், விவசாய அமைச்சின் ஊடாக தங்கவேலாயுதபுரம் கிராமத்தில் 100 குடும்பங்களுக்கு தலா 83 ஆயிரம் பெறுமதியான நீர் இறைக்கும் பம்பிகள் மற்றும் 17 லட்சம் பெறுமதியான 10 ஊடு சாகுபடி இயந்திரம் என்பனவும் கையளிக்கப்பட்டு இருந்தன.

இதனைத் தொடர்ந்து சேதன உரம் உற்பத்தி தொடர்பாக விவசாயிகளுக்கு செய்கை முறையிலான விழிப்பூட்டல்களும் வழங்கப்பட்டு இருந்தன.



# புலிக்குளம் அபிவிருத்தித் திட்டம் துறைசார் நிபுணர்களுடன் ஆய்வு

## மேற்கொண்டார் அமைச்சர் டக்ளஸ்



கிளிநொச்சி, அறிவியல்நகர் யாழ். பல்கலைக்கழக வளாகத்துக்கு, புலிக்குளத்திலிருந்து தண்ணீரை வாய்க்கால் மூலம் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளை, மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா உறுதிசெய்தார்.

முன்னதாக 2013 ஆம் ஆண்டு, யாழ் பல்கலைக்கழகத்துக்கென அறிவியல்நகர் பகுதியில் 568 ஏக்கர் காணியை அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேசிப் பெற்றுக்கொடுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தற்போது பல்கலைக்கழகத்துக்கான நீர் விநியோகத்துக்கான ஏற்பாடுகளையும் செய்து கொடுத்துள்ளார்.

புலிக்குளத்திலிருந்து அறிவியல்நகர் வளாகத்துக்கு வாய்க்கால் மூலம் தண்ணீர் பெற்றுக்கொள்ளும் திட்டத்துக்கான கோரிக்கை, அறிவியல்நகர் யாழ் பல்கலைக்கழக வளாகத்தினரால் யாழ் பல்கலைக்கழக பேரவை உறுப்பினரும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரின் மேலதிக இணைப்பாளருமான கோ.றுஷாங்கன் மூலம், ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்தக் கோரிக்கையை நீர்ப்பாசனத்துறை அமைச்சர் சமல் ராஜபக்ஷவிடம் கடந்த ஏப்ரல் மாதம் சமர்ப்பித்து அதற்கான அனுமதியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பெற்றிருந்தார்.

இந்தத் திட்டம் பின்னர் கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றுமும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிடம் அமைச்சர் சமல் ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டு, குறித்த அமைச்சின் செயலாளர் அண்மையில் புலிக்குளம் பகுதிக்கு நேரில் சென்று குளத்தைப் புனரமைப்பதற்கான திட்டம் குறித்து ஆராய்ந்திருந்தார்.

8 கோடி ரூபா மதிப்பீடு செய்யப்பட்டிருந்த இந்தத் திட்டத்தை உடனடியாக கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தும் வகையில், முதற்கட்டமாக குளத்திலிருந்து அறிவியல்நகர் பல்கலைக்கழக வளாகம் வரையிலான வாய்க்காலைப் புனரமைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டு, இதற்கென ஒரு கோடியே 50 லட்சம் ரூபா இராஜாங்க அமைச்சால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுமார் இரண்டு கிலோமீற்றர் நீளத்துக்கு இவ்வாறு வாய்க்கால் மூலம் நீர் அறிவியல்நகர் பல்கலைக்கழக வளாகத்துக்கு எடுத்துவரப்படும்போது, இடையில் உள்ள மலையாளபுரம், பொன்னகர் ஆகிய கிராமங்களின் நிலத்தடி நீர்வளமும் அதிகரித்து கிணறுகளில் நீர்க்கொள்ளளவும் கூடும்.

இந்தத் திட்டத்தின் முன்னேற்ற நிலை தொடர்பாக, மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன், யாழ்.பல்கலைக்கழகத்தின் பொறியியல், விவசாய, தொழில்நுட்ப பீடங்களின் பீடாதிபதிகள், முன்னாள் பீடாதிபதிகள், தோட்ட முகாமையாளர் உள்ளிட்டவர்களுடன், மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், கமநலசேவைத் திணைக்கள உதவி ஆணையாளர், பிராந்திய விவசாய ஆராய்ச்சி மையப் பிரதிப் பணிப்பாளர், துணுக்காய் பிரதேச செயலாளர் உள்ளிட்டோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு முன்னேற்ற நிலை குறித்த விளக்கங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு வழங்கினர்.

இதன்போது, புலிக்குளத்திலிருந்து அறிவியல்நகர் வளாகத்துக்குப் பெறப்படும் நீர், விவசாயப் பீடத்தின் விவசாய முயற்சிகளுடன், பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும், விடுதியில் தங்கியிருக்கும் மாணவர்களின் குடிதண்ணீர் தேவையையும் நிறைவுசெய்யும் வகையில் திட்டமிடப்படவேண்டும் என, பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலையப் பிரதிப் பணிப்பாளர், விஞ்ஞானி கலாநிதி அரசகேசரி சுட்டிக்காட்டியமையை, பல்கலைக்கழக பீடாதிபதிகள் உள்ளிட்ட அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

ஏற்கனவே அறிவியல்நகர் பல்கலைக்கழகத்தில் உள்ள நிலத்தடி நீரைப் பெற்றுக்கொள்ளும் வசதிகள் கோடைகாலத்தில் தடைப்பட்டு சிரமங்கள் எதிர்கொள்ளப்பட்டு வருவதால், புலிக்குளத்திலிருந்து பெறப்படும் நீரைக் குடிதண்ணீர்த் தேவைக்கும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் நீர் சுத்திகரிப்புத் தொகுதியும் அமைக்கப்பட வேண்டும் என்று இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, புலிக்குளத்தை அண்டிய விவசாய வயல் நிலமான சுமார் 150 ஏக்கர் நிலப்பரப்பையும் அறிவியல்நகர் பல்கலைக்கழக வளாகத்துக்கே வழங்கி, பொதுமக்களுடன் இணைந்த விவசாய நடவடிக்கையில் பல்கலைக்கழகம் ஈடுபடுவது என்றும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

தற்போது விவசாயபீடத்தின் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் காணியின் மண் தரத்தை அதிகரிப்பதற்கென கிளிநொச்சி அம்பாள்நகர் அல்லது பொருத்தமான பகுதியிலிருந்து சுமார் 50 டிப்பர் கொள்ளளவு வளமான மண்ணைப் பெற்றுக்கொடுப்பதற்கு நீர்ப்பாசன திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் ராஜகோபு மற்றும் கமலநசேவைகள் பிரதி ஆணையாளர் தேவரதன் ஆகியோர் இதன்போது இணக்கம் தெரிவித்தனர்.

மேலும், விவசாயபீடத்தின் பயிர்ச்செய்கை நடவடிக்கையை மேற்கொள்வதற்குத் தேவையான ஆளணியை அதிகரிக்கவேண்டுமென விவசாயபீட தோட்ட முகாமையாளர் ஸ்ரீதரன் கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கலந்துரையாடலின்போது, பிரஸ்தாபிக்கப்பட்ட அனைத்துக் கோரிக்கைகளையும் எழுத்து மூலம் இந்த வாரத்துக்குள் சமர்ப்பிக்குமாறும், அதனை சம்பந்தப்பட்ட அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று தேவையான ஏற்பாடுகளை செய்துதருவேன் எனவும் இதன் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பல்கலைக்கழக பீடாதிபதிகளிடம் உறுதியளித்தார்.

இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்போது, அறிவியல் நகர் பல்கலைக்கழக சமூகம் மாத்திரமன்றி, அயல் கிராமங்களான பொன்னநகர் மற்றும் மலையாளபுரம் ஆகிய பகுதிகளின் நீர்வளமும் அதிகரித்து, அந்தக் கிராமங்களின் மக்களும் அதிக பயனடைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி நீதிமன்ற வளாகத்தில் மணல் பகிரங்க ஏல விற்பனைக்கு!

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் உள்ள மணல் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் உள்ள மணல் எதிர்வரும் 17 ஆம் திகதி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது. குறித்த மணலை ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணிநேரத்திற்கு முன்னர் பார்வையிட முடியும் எனவும் நீதிமன்ற பதிவாளர் தெரிவித்துள்ளார்.

## பேர்ள் கப்பல் தீ விபத்து; விசாரணை ஒத்திவைப்பு

'எக்ஸ் பிரஸ் பேர்ள்' கப்பல் தீப்பற்றியமை தொடர்பில் முன்னெடுக்கப்படும் வழக்கு விசாரணை எதிர்வரும் ஓகஸ்ட் 6ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, 'எக்ஸ் பிரஸ் பேர்ள்' கப்பல் தீப்பற்றியமை தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளை விரைவாக நிறைவு செய்து, அதன் முன்னேற்றங்களை நீதிமன்றத்துக்கு அறிக்கையிட நடவடிக்கை எடுப்போம் என சட்டமா அதிபர் சார்பில் மன்றில் ஆஜராகிய பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் மாதவ தென்னக்கோன் கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

விசாரணை அதிகாரிகளால் கோரப்பட்ட கப்பலின் உள்நாட்டு முகவர் நிறுவனத்திடம் காணப்பட்ட அனைத்து கணினி தரவுகளும் வழங்கப்பட்டுள்ளன என்று குறித்த நிறுவனம் சார்பில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி அநுர மெத்தேகொட நீதிமன்றத்துக்குத் தெரிவித்தார்.

அதற்கமைய, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 06 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்த கொழும்பு பிரதம மேல் நீதிமன்ற நீதிபதி, விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையை அன்றைய தினம் சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

இதனிடையே, நேற்றைய (வியாழக்கிழமை) வழக்கு விசாரணையின்போது கப்பலின் கப்டன், கப்பல் நிறுவனத்தின் உள்நாட்டு முகவர் நிலையத்தின் தலைவர் அர்ஜுன ஹெட்டியாராச்சி உள்ளிட்ட நிறுவனத்தின் பிரதம அதிகாரிகள் சிலரும் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

## நாட்டை விட்டு வெளியேற பெருமளவானோர் முயற்சி!

### வஜிர அபேவர்தன சுட்டிக்காட்டு

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து 6 லட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் உயர் ஆணையகங்களில் விசாக்களுக்கு விண்ணப்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்தன இதனைத் தெரிவித்துள்ளார். இன்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

விசாக்களுக்கு விண்ணப்பிக்கும் இலங்கையர்களின் சதவீதம் அண்மைய காலங்களில் மிகப் பெரிய அளவில் அதிகரித்துள்ளமை இதுவே முதல் முறையாகும்.

விசாக்களுக்கு விண்ணப்பித்தவர்களில் பெரும்பாலானோர் சிங்கள பௌத்தர்கள் என்பதும், அறிஞர்கள், கல்வியியலாளர்கள், வணிகர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் இதில் அடங்குகின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

விசா வழங்கல் சேவைகளால் உறுதிப்படுத்தப்பட்டபடி, ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்குச் செல்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கம் ஸ்திரத்தன்மை இல்லாமல் நாட்டை நிர்வகிப்பதே இதற்குக் காரணமாகும். இதுபோன்ற நிலைமை நாட்டின் எதிர்காலத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அவர் மேலும் கூறினார்.

## யாழ்.பருத்தித்துறையில் 3 எறிகணைகள் மீட்பு



யாழ்.தென்மராட்சி, சரசாலை – பருத்தித்துறை வீதி புனரமைப்பு பணியின் போது அடுத்தடுத்து 3 எறிகணைகள் மீட்கப்பட்டுள்ளன.

வீதி அகலிப்பு பணியின் போது 122 மில்லிமீற்றர் அளவுடைய மூன்று எறிகணைகள் இனங்காணப்பட்டுள்ளன.

இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.


குறித்த எறிகணைகளை அந்த இடத்தில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தொழிற்சங்க நடவடிக்கையைக் கைவிடுமாறு ஆசிரியர்களிடம் நாமல் ராஜபக்ஷ கோரிக்கை

தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள், மாணவர்கள் மீது அனுதாபம் காட்டவும், கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு மீள திரும்பவும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களிடம் பேசிய அமைச்சர் –

தொழிற்சங்க நடவடிக்கையால் மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் எனவும், அரசாங்கமோ காவல் துறையோ அல்லவெனவும் குறிப்பிட்டுள்ளார்.



எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகப் பேசவும், அவர்களின் போராட்டங்களை முன்னெடுக்கவும் தொழிற்சங்கங்களுக்கு உரிமை உண்டு என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், மற்றொரு நபர்களின் அடிப்படை உரிமைகள் தங்கள் உரிமைகளைச் செயல்படுத்த முயற்சிப்பதால் மீறப்பட்டால், அதை உண்மையான தொழிற்சங்க நடவடிக்கை என்று கூற முடியாது.

குழந்தைகளுக்கு கல்வி கற்பிப்பது ஒரு தேசியப் போராட்டம் என்றும், இதுபோன்ற முயற்சிகளை கைவிட வேண்டும் என்றும் ஆசிரியர்களை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கேட்டுக்கொண்டார்.

ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்துடன் கலந்துரையாடலாம் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt.Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.07.2021 இல் வெளியிடப்பெற்றது.